மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்பு செய்தவர் அவ்விடத்திலிருந்து வெளியேற்றப்பட்டு அவரால் கட்டப்பட்ட உணவு விடுதியும் நகரியத்தால் அகற்றப்பட்டது. வேறொரு இடத்தில் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்காக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு எதிர்பார்க்கப்படுகிறது.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. ஏ. தங்கராஜு : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசுக்குச் சாதகமாக இருப்பது உண்மைதானா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சாதகமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. தங்கராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இருந்தும் அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் தனது அறிக்கையில் மேற்குறிப்பிட்ட மாற்று இடத்தில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு திருத்தப்பட்ட வரைப்படம், மதிப்பீடுகள் தயார் செய்து அனுப்பி வைக்குமாறு கோரியிருக்கிறார்கள். திருநெல்வேலி தாட்கோ செயற்பொறியாளர் அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதும் அரசு விரைவில் அதுபற்றி ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துறையூர் நகருக்கு காவேரியிலிருந்து குடிநீர்

*546. திரு. ஆர். மூக்கன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, துறையூர் நகருக்கு காவேரியிலிருந்து குடிநீர் கொடுக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

1990 ஏப்ரல் 6]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) துறையூர் நகராட்சி மற்றும் உப்பிலியர் புரம், மேட்டுப்பாளையம், தாத்தையங்கார்பேட்டை, பால கிருஷ்ணம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் 94 வழியோரக் கிராமங் களுக்கும் குடிநீர் வழங்க ஒரு கூட்டுக்குடிநீர்த் திட்டம் தயாரிப்பது பற்றி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசிலனையில் உள்ளது. திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் அளித்த பின்னர், திட்டப்பணிகள் தொடங்கப்படும்.

திரு. ஆர். மூக்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டம் எந்த ஆண்டு எப்போது நிறைவேற்றப்படும்? அந்தத் திட்டத்தின் மூலம் எவ்வளவு பேர் பயன்பெறுகிறார்கள்? அந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு; வழியோரத்தில் எத்தனை நகரங்கள், கிராமங்களுக்குள் குடிநீர் வழங்கத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது? நபர் ஒருவருக்கு ஆகும் செலவு எவ்வளவு? ஆண்டுக்கு இதைப் பராமரிப்பதற்கு எவ்வளவு செலவு என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் விளைவாக ஏறத்தாழ 94 வழியோரக் கிராமங்களுக்குப் பயன் கிடைக்கும் என முன்பு சொன்னேன். மேலும் இந்தத் திட்டத் தின் தோராய மதிப்பீடு ரூபாய் 1064.50 லட்சம் ஆகும். மேலும் இந்தத் திட்டத்தின் மூலமாக துறையூர் நகராட்சியில் 40 ஆயிரம் மக்களும், தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சியில் 15,566 மக்களும், மேட்டுப்பாளையம் பேரூராட்சியில் 10,920 மக்களும், பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சியில் 14,500 மக்களும், உப்பிலியாபுரம் பேரூராட்சியில் 15,000 மக்களும், வழியோரத் தில் 1 லட்சத்து 86 ஆயிரத்து 806 மக்களும் பயனடைந்து கொண்டு இருக்கிறார்கள். நபர் ஒன்றுக்கு இதன் மூலமாக ரூபாய் 481 செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் இருக்கிறது. அரசின் அனுமதிக்குப் பிறகு இது துவக்கப்படும் என்பதை முன்பு சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்துதல்

*1716. திரு. எம். சிரங்கன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: